DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No.380 /2023 |
| Deposition of witness | : | PW-7 |
| Name | : | ராஜேஷ்கண்ணா |
| Father's /Husband Name | : | கோவிந்தசாமி |
| Village | : | பட்டீஸ்வரம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 54 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10th day December 2024.
Accused absent and petition U/sec. 317 Cr.P.C (355 BNSS) filed and allowed. App and defense counsel present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

புகாரில் வெள்ளிப்பொருட்கள் மற்றும் கவரிங் நகைககள் காணாமல்போனதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ள இரண்டு பீரோக்களின் சாவியை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 3ல் சம்பவ நேரம் 26.08.2022 இரவு 20.45 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 27.08.2022 காலை 08.00 என்றாலும், முதல் தகவல் அறிக்கை 03.09.2022 அன்று 8 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 7 நிரப்பப்படவில்லை என்றால் சரியல்ல, எதிரியின் விவரம் தெரியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் 8,9 நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது புகார்தாரருடன் அவரது கணவர் சிவசங்கர் உடன் வந்தார். வேறுயாரும் வரவில்லை. சம்பவ இடத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை, ஆய்வாளர் சென்றார். காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் சுமார் 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் சுமார் 10 நிமிடத்தில் வந்து விடலாம். நான் சொல்லும் நாள் நேரம் இடத்தில் புகார் பெறப்படவில்லை என்றாலும், சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-M.Elavarasi,
Judicial Magistrate No.I, Kumbakonam.